**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**
**Case No: CC.140/2020**
**Prosecution Witnesses : 8**

| | | | |
|---|---|---|---|
| Name | : பவுல் யேசுதாசன் | Caste | : |
| Father 's Name / Husband Name | : இருதயராஜ் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர் இல்லை)
**(27.05.2026)**
**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம் மாசார்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் கடந்த 2019ம் தேதி நிலைய பொறுப்பில் பணியிலிருக்கும் போது திருமங்கலம் தாலுகா வட்ட காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 17.09.2018ம்அன்று பதிவு செய்யபட்ட திருமங்கலம் தாலுகா காவல் நிலைய குற்ற எண். 257/2018 ச/பி.279, 304(எ) இதச படி வழக்கு பதிவு செய்யபட்ட வழக்கு கோப்பினை பார்வையிட்டு எனது மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். இவ்வழக்கில் சம்பந்தபட்ட எதிரி திலிபன் என்பவர் ஓட்டி வந்த ரொனால்ட் கார் TN 67 BE 5810 என்ற பதிவு எண் கொண்ட விபத்து வாகனத்தை ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தின் படி ஆய்வு மேற்கொண்டு மோட்டார் வாகன ஆய்வு சான்று வழங்கிய திருமங்கலம் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மூக்கன் என்பவரை விசாரித்து மேற்படி சாட்சிகள் 161(3) குவிமுச படி வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு

03.03.2019 அன்று இவ்வழக்கில் புலன் விசாணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 279, 304(எ) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் கு.வி:**

விபத்துக்குள்ளான வாகனத்தை ஆய்வு செய்வதற்கு 5 மாதங்கள் கழித்து தான் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது ஆவணங்களின் படி எனக்கு தெரியவந்தது. நான் வேண்டுகோள் கடிதத்தை கொடுக்கவில்லை எனக்கு முன்பு இருந்த விசாரணை அதிகாரி கொடுத்தார். அதற்கான காலதாமதம் எனது விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்ததை தவிர நான் வேறு யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் முழுமையான விசாரணை குறைபாடு உள்ளது என்றாலும் அதனை சரிவர நான் கவனிக்காமல் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**.இல்லை